# எம்.ஜி.ஆர்.எனதுநண்பர்: சென்னையில்ஜே.ஆர்.

★★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 22 ஜுல்ஹஜ் 6 இதழ்: 268
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-11-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்ப கனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

[சென்னை]

''தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் எனது நண்பர். அவர் எமது நாட்டிலுள்ள மலையகத்தில்-கண்டியில் பிறந்தவர். இதனையிட்டு நான் பெருமைப் படுகின்றேன். கண்டியில் அவர் பிறந்த இல்லத்துக்கு நான் சென்றுள்ளேன். இது தவிர, திரு. எம். ஜி. ராமச்சந்திரனுடன் நான் நெருங்கிய உறவுகள் வைத்துள்ளேன். தமிழக முதலமைச்சர் வெளிநாடு விஜயம் சம்பந்தமாக இன்று இங்கு இல்லாவிட்டாலும், அவரது சார்பாக இங்கு அளிக்கப்பட்டிருக்கும் வரவேற்புகளுக்கு நான் மிகவும் நன்றிகூறுகின்றேன்''

இவ்வாறு, நேற்றுக்காலை இங்கு வந்துசேர்ந்த இலங்கை ஜனாதிபதி திரு. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று பகல் நடைபெற்ற வைபவமொன்றில் குறிப்பிட்டார்.

## புதிய வரவு - செலவுத்திட்ட மதிப்பீடுகள்



# துண்டு விழும் தொகை

# ரூ. 802 கோடி

வரவு: ரூ. 1135,38,38,440
செலவு: ரூ. 1937,68,97,611

(நமது நிருபர் மாலி)

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. றெனிடி மெல் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 1979-ம் ஆண்டுக்கான புதிய வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி, வருமானம் 1135 கோடியே 38 லட்சத்த 38 ஆயிரத்து 440 ரூபா வாகவும்; செலவு 1937 கோடியே 68 லட்சத்து 97 ஆயிரத்து 611 ரூபாவாகவும்; துண்டுவிழும் தொகை 802 கோடியே 30 லட்சத்து 59 ஆயிரத்து 171 ரூபாவும்ஆகும்.

புதிய வரவுசெலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் அமைச்சுக்கே ஆகக் கூடுதலான (552 கோடியே 22 லட்சத்து 18 ஆயிரத்து 361 ரூபா) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்ததாக கல்வி, உணவு கூட்டுறவுத்துறை, ஸ்தலஸ்தாபன அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

காணி, காணிஅபிவிருத்தி: பொதுநிர்வாகம், நிதி, தோட்டக்கைத்தொழில் மீன்பிடி, பாராளுமன்றவிவகாரம் ஆகிய அமைச்சுக்களுக்கு மிகக்குறைவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

| (அமைச்சு மற்றும் விபரம்) | (1978) | (1979) |
|---|---|---|
| ஜனாதிபதி | ரூ. 15,71,700 | ரூ. 12,66,50,000 |
| பாதுகாப்பு | ரூ. 38,02,57,000 | ரூ. 73,77,49,000 |
| வெளிவிவகாரம் | ரூ. 7,88,72,000 | ரூ. 10,02,28,000 |
| திட்ட அமுலாக்கல் | ரூ. 9,46,100 | ரூ. 67,41,15,300 |
| தேர்தல் திணைக்களம் | — — | ரூ. 1,06,52,980 |
| காணி, காணி அபிவிருத்தி | ரூ. 85,44,98,030 | ரூ. 61,40,43,485 |
| வர்த்தகம் | ரூ. 3,11,09,635 | ரூ. 18,72,84,777 |
| கல்வி | ரூ. 103,74,77,410 | ரூ. 111,52,90,120 |
| உயர் கல்வி | — — | ரூ. 62,82,76,620 |
| தொழில் | ரூ. 2,29,17,834 | ரூ. 297,63,935 |
| பொது நிர்வாகம் | ரூ. 118,77,94,150 | ரூ. 60,80,60,100 |
| கிராம அபிவிருத்தி | — — | ரூ. 1,50,26,310 |
| ஸ்தலஸ்தாபனம், வீடமைப்பு | ரூ. 44,43,62,092 | ரூ. 108,29,12,828 |
| கைத்தொழில், விஞ்ஞானம் | ரூ. 62,04,88,865 | ரூ. 75,33,61,670 |
| நிதி | ரூ. 671,99,28,894 | ரூ. 5,22,22,18,361 |
| போக்குவரத்து | ரூ. 56,51,25,310 | ரூ. 1,03,21,06,700 |
| தோட்டக் கைத்தொழில் | ரூ. 10,43,62,315 | ரூ. 6,36,19,010 |
| நீதி | ரூ. 8,03,30,390 | ரூ. 9,59,01,223 |
| விவசாய அபிவிருத்தி | ரூ. 56,04,30,175 | ரூ. 78,13,56,350 |
| மீன்பிடி | ரூ. 12,77,94,915 | ரூ. 12,62,04,090 |
| மகாவலி அபிவிருத்தி | — — | ரூ. 97,98,91,090 |
| இளைஞர் விவகாரம் | — — | ரூ. 10,86,34.000 |
| கிராமிய அபிவிருத்தி | — — | ரூ. 9,50,67,310 |
| தபால், தந்தி | ரூ. 24,24,76,633 | ரூ. 50,35,67,010 |
| சுகாதாரம் | ரூ. 55,82,08,409 | ரூ. 86,19,24,898 |
| ராஜாங்கம் | ரூ. 5,22,43,820 | ரூ. 30,36,64,490 |
| சமூகசேவைகள் | ரூ. 50,22,76,154 | ரூ. 6,89 06,878 |
| கலாச்சாரம் | ரூ. 1,51,87,620 | ரூ. 2,12,25 720 |
| பாராளுமன்ற விவகாரம் | ரூ. 91 61,890 | ரூ. 76,70,720 |
| உணவு, கூட்டுறவு | ரூ. 209,95,66.620 | ரூ. 236,11,35,569 |
| புடவைக் கைத்தொழில் | ரூ. 2,26,87,060 | ரூ. 4,04,24,030 |
| தெங்கு கைத்தொழில் | — — | ரூ. 2,99.40,910 |

## காரசாரமான விவாதம்

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பல்கலைக்கழகச் சட்டமூல விவாதத்தில், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தேயூக்கும் கூட்டணி உறுப்பினர்களுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது.

இவ்விவாதத்தில் பதில்எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பல தடவைகளில் குறுக்கிட்டு ஆவேசமாக வாதிட்டார்.

நேற்று நள்ளிரவு(இச்செய்தி அச்சுக்குப்போக்கும்)வரை பல்கலைக்கழக சட்டமூல மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெறவில்லை. (ம)

## இலங்கை ஜனாதிபதிக்கு குதூகல வரவேற்பு

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அவரது பாரியாரும் நேற்றுத் 'தாயகம் திரும்பும் வழியில்) தமிழ்நாடு வந்து சேர்ந்தபோது குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்கத்தாவிலிருந்து பாரத விமானப்படை விமானத்தின் விசேஷ விமானமொன்றில் நேற்றுச் சென்னை மீனம்பாக்கம் விமானநிலையம் வந்து சேர்ந்தபோது ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு தமிழ்நாடு

[6-ம் பக்கம் பார்க்க]

## இந்திரா வெற்றி உறுதி!



சிக்மகளூர் இடைத்தேர்தலில் இன்று அதிகாலைவரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி திருமதி இந்திரா காந்தி வெற்றிப்பாதையில் திகழ்கின்றார்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை, மூன்றரை லட்சம் வாக்குகள் எண்ணப்பட்டு, திருமதி இந்திரா காந்தி 66,329 அதிகப்படி வாக்குகளால் முன்னணியில் நிற்கின்றார்.

திருமதி காந்தியின் வெற்றி இப்போது உறுதியாகிவிட்டது.

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலைக்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும் பொழுது சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 0738

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற நீர்வேலியைச் சேர்ந்த ஞானசேகரம் அப்புத்துரை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

அப்புத்துரை கைம்பெண் ஞானமணி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி

மனுதாரி

மரணசாதன)

நியாயாதிக்க) இல. 3375

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்.

தயாரித்தவர்:

சு. பரமராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.

0737

### பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சி நிலையத்தில் பயிற்றுனராக பதவி உயர்வுபெறும் ஐ. பி. ஜோசப் அவர்களுக்கு தாதிகள் பயிற்சிநிலையத்தில் பிரிவுபசாரம் ஒன்று நடைபெற்றது. திரு. க. மார்க்கண்டேயர் தலைமைவகித்தார்.

### சுன்னாகம் பட்டணசபை

### கேள்விப் பத்திர அறிவித்தல் 1978

சுன்னாகம் மீன் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல மீ.2-ல் 18-11-78 தொடக்கம் 31-12-78 வரையிலான காலப்பகுதியில் மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்குரிய குத்தகைக்கான கேள்விகள் 15-11-78 புதன்கிழமை காலை 10 மணி வரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5/-ம் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100/-ம், 13-11-78 திங்கட்கிழமை நண்பகல் 12-15 க்கு முன்னதாக இந்தச் சபையில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
பட்டணசபை, சுன்னாகம்.
பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம், 6-11.78.

0741

PERCIVAL HALL
Chapel Street, Jaffna

I C M. A.
Foundation A

Applications Close 14-11-78

Enrolment on 18-11-78

Classes Commence 20-11-78

I C M A. Foundation B
Professional 1

Applications Close 4-12-78

Enrolment on 8-12-78

Classes Commence 9-12-78

0739

### யாழ் மாவட்ட நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

1. வயிரமுத்து செல்லத்துரையும்
2. பெண் றெஜினா பூமணியும் இருவரும்
அடப்பன் ஒழுங்கை, யாழ்ப்பாணம் தற்பொழுது இல. 10, மவுண்ட்காமல் வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

எதிர்

1. சிவப்பிரகாசம் கதிரவேலுவும்
2. பெண் அன்னலட்சுமியும்
3. தம்பு சபாபதிப்பிள்ளையும்,
மீசாலை தெற்கு, மீசாலை.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு/11404-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல்வட்டி ரூபா 3512/-ம் 24-1-70 தொடக்கம் 1-9-70 வரைக்கும் ரூபா 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 451/85.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை "உப்புக்குளி வயல்" நெ. பர. 104. இதில் கிழக்கில் பிரிவிடப்பட்ட நெ. பர 34 இதற்கு எல்லை கிழக்கு சுப்பிரமணியம் வயித்திலிங்கத்துக்குரியவாதனம், வடக்கு கனகசபை சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு தம்பு சபாபதிப்பிள்ளைக்குரியவாதனம், தெற்கு கதிர்காமர் மயில்வாகனத்துக்குரியவாதனம். பதிவு F 298/284.

கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமி,
விற்பனை ஆணையாளர்,
"கலை இல்லம்",
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை,
10-10-78.

0740

விமர்சனம்

## "சுக்கிராசாரியார்"

(புராணநாடகம்)

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 'சுக்கிராசாரியார்' என்னும் புராண நாடகத்தை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றியுள்ளார்.

இப்புராண நாடகத்தில் கர்நாடக இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடல்களை அமைத்திருந்தும, நடிப்பவர்களே பாடல்களை பாடி நடித்ததும் சிறப்பாக இருந்தது. சினிமா பாடல்களுக்கு வாய் அசைத்து நடிக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாறான முயற்சி பாராட்டக்கூடியதாகும்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக நுண்கலைப்பிரிவு மாணவர்கள் இந்த நாடகத்தைத் தயாரித்ததோடுமட்டுமல்லாமல் நடிப்பு, பின்னணி இசை போன்றவற்றில் தாமே பூசிய பங்கினை வகித்தார்கள்.

நாடகத்தின் கதை சிக்கலாக இருந்தாலும், அதனை இலகுவான முறையில் நாடகமாக்குவதில், கதாசிரியரும். இயக்குநருமான இணுவையூர் திருச்செந்திநாதன் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூற வேண்டும். பாத்திரங்களைத் தெரிவுசெய்வதில் அவரது முயற்சி வீணாகவில்லை.

நாடகத்தின் நாயகியாக நடித்த செல்வி சுகிர்தகலா சித்திரவேலாயும் இயல்பாகவே நடித்துள்ளார். நல்ல இனிமையான குரல். வசனங்களைப் பேசுகின்ற முறை, உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற முறை, நடிப்பு, பாடுந்திறன ஆகிய இரண்டையும்இயற்கையாகக்கொண்ட இவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு.

சுக்கிராசாரியராக தோன்றிய செல்வன் கந்தையா அருட்சோதி நடிப்பிலும், வேடப்பொருத்தத்திலும் எல்லோராலும் பாராட்டப்பட்டதிலிருந்து அவரின் திறமையினை ஊகிக்கலாம்.

கசனாகத் தோன்றிய வீ.சுப்பிரமணிய சர்மா, யயாதி மன்னனாக வந்த ஆர். சுந்தரலிங்கம் போன்றோரும் தங்களது பாத்திரங்களை உணர்ந்து நடித்தனா,

அசுர யன்னன் விருஷபர்னனாக நடித்த ஜம்புநாதன் அசுர ராஜாவுக்குரிய கம்பீரத்துடனும் நன்றாக நடித்தார். ஆனால் வசன வசனம்பேசும்போது இறுதிச் சொற்களை விழுங்கிவிடுகின்றார் அவர் மகளாக நடித்த செல்வி ரதிராணி மகேஸ்வரன் எவருக்கும் சளைக்காமல் நல்லமுறையில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.

அசுரர்களாக நடித்த பி. வின்சென்ட், எஸ். செல்வநேசன், எஸ். சிவச்சந்திரன் ஆகியோரும் நன்றாக நடித்தாலும் இன்னும் சிறப்பாக செய்திருக்கலாம்.

நாடகத்தின் பாடல்களை எழுதி இசையமைத்த பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களும், ஒப்பனையைச் செய்த இளவசலை லங்கா அவர்களும் வழக்கம்போல் தமது திறமையினை வெளிப்படுத்தியுள்ளனர். பின்னணி இசை வழங்கியவர்களும் தமது பணியை நன்றாகச் செய்திருந்தனர்.

பொதுவாக நாடகத்தில் பல குறைகள் இல்லாமல் இல்லை.

ஒளியமைப்பு, ஒலியமைப்பு ஆகியவற்றில் தக்க கவனம் செலுத்தப்படவில்லை. ஒளியமைப்பில் கூடிய கவனம் செலுத்தியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். ஒலியமைப்பு மிக மோசமாக இருந்தமை வருத்தத்திற்குரியதாகும். அதனால் நாடகத்தின் சுவையே குன்றிவிட்டது.

இத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் நாடகம் தரமாக இருந்தது பாராட்டப்பட வேண்டியதுதான்.

-த. சிவஞானரஞ்சன்

மந்திகை ஆஸ்பத்திரிக்கு

## எக்ஸ்ரே, சத்திர சிகிச்சை உபகரணம் வந்துசேர்ந்தன!

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்குத் தேவையான எக்ஸ்ரே உபகரணங்கள் சத்திரசிகிச்சை உபகரணங்கள் என்பன கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன.

எக்ஸ்ரே நிலையம், சத்திர சிகிச்சை நிலையம் போன்றவற்றுக்கான கட்டிடங்கள், கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்க காலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

வடமராட்சிப் பகுதிநோயாளிகள் எக்ஸ்ரே எடுத்துக் கொள்ள, தெல்லிப்பளை, பண்ணை போன்ற தூர இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. மந்திகையில் மேற்படி நிலையம் செயற்படுமாயின் வடமராட்சிப் பகுதி நோயாளிகள் பெரிதும் நன்மையடைவார்கள்.

## பரீட்சையில் தோல்வி; மாணவன் நஞ்சிடம் தஞ்சம்

(நெல்லியடி)

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியெய்தத் தவறிய மாணவன் ஒருவர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தார். கரணவாய் சக்களாவத்தை என்னும் இடத்தைச் சேர்ந்த இராமசாமி ஆனந்தராசா என்பவரே இவ்வாறு காலமானார்.

காலஞ்சென்றவரின் மரண விசாரணை கரணவாயில் வடமராட்சிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். வீ. புவனேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது விசாரணையின் பொழுது பரீட்சை திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சைமுடிவுப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் இந்து சமயம் மட்டுமே காலஞ்சென்றவர் சித்திஎய்தியிருந்தார்.

விசாரணையின் பொழுது சாட்சியமளித்த சகோதரி இராமசாமி மல்லிகாதேவி (23வயது) தெரிவித்ததாவது:-

"காலஞ்சென்ற ஆனந்தராசா எனது சகோதரர். அவருடன் நாங்கள் ஐந்து பேர் நமது பெற்றோர்களுக்கு பிள்ளைகள். இருவர் பெண்களாவோம். சம்பவதினம் காலை 11 மணிக்கு மேல் எமது சித்தப்பா பிள்ளை! பிள்ளை! என கூப்பிட்டபடி எமது வீட்டிற்கு வந்தார். அப்பொழுது ஆனந்தராசாவும் ஒரு போத்தலுடன் வீட்டிற்குள் வந்தார்

ஏதோ குடித்துவிட்டான் என்று சித்தப்பா சொன்னார்.

நான் உடனே சகோதரனின் கையிலிருந்த போத்தலைப் பறித்தேன். தான் நஞ்சு குடித்து விட்டதாக சகோதரன் என்னிடம் கூறினான். சித்தப்பா தனது கையை இறந்தவரின் வாய்க்குள்விட்டுத் துடைத்தார். அச்சமயம் மெதுவாக வலி எடுக்கத் தொடங்கியது அத்துடன் மயக்கமும் ஏற்பட்டது நானும் சகோதரியும் குளறினோம்.

நமது அழுகுரல் கேட்டு அயலவர்கள் ஓடிவந்தார்கள், ஒருவர் கார் கொண்டு வந்தார்- அக்காரில் சகோதரனை வல்லை கூட்டுறவு வைத்தியசாலைக்கு எடுத்து சென்றோம். சில மணி நேரங்களின் பின் மீண்டும் வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டார். அப்பொழுது ஆனந்தராசா இறந்து விட்டதை அறிந்தேன்.

எனதுசகோதரனுக்கு எதிரிகள் கிடையாது. எமது வீட்டிலும் கிருமிநாசினிகள் இல்லை. இவர் எங்கு கிருமிநாசினியை வாங்கினார் என்பதும் எனக்குத் தெரியவே தெரியாது.

சித்தியடைவேன் என காலஞ்சென்றவா நம்பியிருந்து ஏமாந்ததாலும், சகமாணவரின் முகங்களைப் பார்க்க வெட்கப்பட்டுமே ஆனந்தராசா கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் என எண்ணுகிறேன் என்றார்.

மரண விசாரணையின் பொழுது காலஞ்சென்றவரின் சித்தப்பாவான கதிர்காமு அருணாசலம், வல்லை கூட்டுறவு வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் செல்வி எஸ். சின்னத்தம்பி, வல்வெட்டித்துறை பொலிஸ் குணரட்ணபண்டார ஆகியோரும் சாட்சியமளித்தார்கள்.

சாட்சியங்களைப் பதிவு செய்துகொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வீ. புவனேந்திரன் இம்மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சில்லாலைப் பகுதியில்

## பட்டப்பகலில் நடக்கும் திருட்டுச் சம்பவங்கள்

(பண்டத்தரிப்பு)

வீட்டுக்காரர்கள் ஞாயிற்றுக்கிழமைப்பூசைக்கு சமீபத்திலுள்ள தேவாலயத்திற்கு சென்றிருந்த நேரம் பார்த்து பட்டப்பகல் நேரத்தில் வீட்டினுட் புகுந்த திருடர்கள் அங்கு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்கச்சங்கிலி, காப்புகள் உட்பட சுமார் 4000 ரூபா பெறுமதிமிக்க நகைகளை திருடிக்கொண்டு போன சம்பவம் சில்லாலையில் நடைபெற்றுளளது,

இத்திருட்டுச் சம்பவம்பற்றி சில்லாலையைச் சேர்ந்த மரியமலர் சங்கானை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து சங்கானைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டனர்.

சில்லாலைப்பகுதியில் அண்மைக்காலத்தில் இது போன்ற பல திருட்டுச் சம்பவங்கள ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நேரங்களில் மக்கள தேவாலயப் பூசைக்கு செல்லும்வேளைகளில் அடிக்கடி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

பரந்தன் சந்தையில் இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் கல்வீச்சு போத்தல் எறிகளுடன் இரு பகுதியினரும் வாள் கொண்டும் மோதினராம்.

இதனால் பாலசிங்கம், கந்தசாமி ஆகிய இருவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பரந்தன் சந்தைக்கு இரவும் பகலும் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

(நா. நி.)

### இடமாற்றம்

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம மகேஸ்வரி வித்தியாசாலை ஆசிரியை வித்துவான் திருமதி இ. மகேஸ்வரி இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் செங்குந்த இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம செய்யப்பட்டுள்ளார். (ந.நிரு)

ஈழநாடு
The Eelanaadu

## ஜனாதிபதியின் புனித யாத்திரை

ஜனாதிபதி மேன்மை தங்கிய ஜே ஆர் ஜயவர்தன அவர்கள் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு அண்டை நாடுகளான இந்தியாவுக்கும் நேப்பாளத்துக்கும் போய்விட்டு இப்பொழுது நாடு திரும்பும் கட்டத்துக்கு வந்துள்ளார்.

இந்தப் பயணத்தை ஒரு நாட்டின் தலைவர் என்ற முறையைவிட புனித ஸ்தலங்களைத் தரிசிக்கும் சாதாரண யாத்திரிகன் என்ற முறையிலேயே தாம் மேற்கொண்டதாக அவர் அங்கு கூறியுள்ளார்.

இந்தியாவிலுள்ள புத்தகாயா போன்ற புனித பௌத்த ஸ்தலங்களுக்கு மாத்திரமின்றி நேபாளத்தில் புத்தபெருமான் அவதரித்த லும்பினி போன்ற இடங்களுக்கும் அந்தப் புனிதரின் காலடி பட்ட இடங்களுக்கும் ஜனாதிபதி சென்று வழிபட்டு தியானம் செய்திருக்கிறார்.

புத்த தர்மத்தின் புனித கோட்பாடுகளை அவர் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்களில் எல்லாம் எடுத்துக்கூறியிருப்பதுடன், தமது நாட்டில் புத்தர் போதனைகளை எவ்வாறு அரசியலில் செயல்படுத்த முனைந்துவருகிறார் என்பதையும் விளக்கியிருக்கிறார்.

இந்துசமுத்திரப் பிராந்தியம் பற்றி அவர் குறிப்பிட்டபோது; இங்கு மாத்திரமல்ல உலகம் முழுவதுமே அமைதிப்பிரதேசமாகவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உள்நாட்டில் அன்பின் மூலமே பிரச்னைகளைத் தீர்க்க முயல்வதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

உலகத்துக்கு போதிப்பது இலகுதான். அதனை சொந்தவாழ்வில் கடைப்பிடிப்பதுதான் கஷ்டமான காரியம். ஆனால் திரு. ஜயவர்த்தன போதிப்பது மாத்திரமல்ல; உண்மையான ஒரு தலைவர் என்ற முறையில் நடைமுறையிலும் அவைகளைச் செயல்படுத்த முனைந்துவருகின்றார் என்பது நாடறிந்த உண்மை

பொதுவாழ்வில் ஈடுபடும் மனிதர்கள் பற்றி பல்வேறுவிதமான வியாக்கியானங்களும் விழுவது இயற்கையே. ஆனால் அந்த வியாக்கியானங்களுக்கு மத்தியில் சம்பந்தப்பட்ட மனிதர் தமது நிலையில் இருந்து தளம்பாது நேர்மையின்பால் நின்று செயல்படுவதிலேயே அவரது வெற்றி தங்கியுள்ளது.

திரு. ஜயவர்த்தன அவர்களின் அரசியல்வாழ்வினை நோக்குவோமாயின் சாதாரண அரசியல்வாதி என்ற நிலையிலிருந்து ஒரு ராஜதந்திரியாக வளர்ந்து அரசியல் ஞானி என்ற நிலைக்கும் அவர் உயர்ந்துகொண்டிருக்கிறார்.

அந்த நிலையிலிருந்து அவர் நிலைதளராமல் செயல்படவேண்டும் என்பதே நமது விருப்பம்.

நம் நாட்டில் அரசியல்வாதிகள் பேசும் ஆத்மீகமானது வெறும் பகட்டு பேச்சாகவே இருந்துவந்துள்ளது. உலகுக்கு சமாதானம் உள்நாட்டில் அடக்குமுறை என்பது தான் கடந்தகால சரித்திரம்.

இந்த நிலைமை நமது ஜனாதிபதியின் 'தர்மிஸ்ட' ஆட்சியில் மாறிவருவதாகக் கூறமுடியும். இதே உணர்வுடன் இந்த நாட்டில் எஞ்சியுள்ள அரசியல் பிரச்னைகளையும் தீர்த்து, நாட்டுக்கும் உலகுக்கும் ஓர் உதாரண புருஷராக திரு ஜயவர்த்தன விளங்க வேண்டும்.

அவர் மேற்கொண்ட இந்தப் புனிதயாத்திரையின் பயன் இவ்வாறே அமையும் என்று நம்புவோம்.

### கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரி

# வைத்தியசேவையைமக்கள் பயன்படுத்த வேண்டும்

கடந்த மாதம் திறக்கப்பெற்ற கைதடி ஆயுள்வேத மருந்துவமனை மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். 2-11-78 இல் இம்மருத்துவமனையின் சேவைகளையும், நோயாளிகளுக்குக் கிடைக்கும். வசதிகளையும் கண்டறிந்து ஆயுள்வேத ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென்று 'வட இலங்கை சித்த மருத்துவர் சம்மேளனத்தைச் சேர்ந்த செயற்குழு' உறுப்பினர்கள் அந்நிறுவனத்தைப் பார்வையிட சென்றபோது கைதடி ஆயுள்வேத மருத்துமனையின் பொறுபதிகாரி முன்வந்து உறுப்பினர்களை அன்புடன் வரவேற்ருர்.

'இம்மருத்துவமனை சிறப்புடன் இயங்கவில்லை, மருந்துகள் இல்லை, மருத்துவர்கள் குறைவு வசதிகள் இல்லை' என்றெல்லாம் வெளியுலகில் உலவி வந்த வதந்திகள் அனைத்தும் பொய்யானவை என்பதை இம்மருத்துவமனையின் வளர்ச்சியில் இருந்தும், அரசு செய்து கொடுத்திருக்கும் வசதிகள், சலுகைகள ஆகியவற்றின் மூலமும் அறியகூடியதாயிருந்தது.

வைத்திய சிரோமணி
எம். எஸ். சுந்தரம்

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து தினமும் பஸ்வண்டிகள் இம்மருத்துவமனைக்குச் சென்று வருகின்றன. மருத்துவ மனைக்குச் செல்லும் நோயாளிகளும், மற்றையோரும் எதுவித சிரமமும் இன்றி நேரடியாகவே மருத்துவமனைக்குச் சென்றுவர இச்சேவை மிகப்பயனுள்ளதாக இருப்பதுடன் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களையும் நீக்குகிறது.

இம்மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் உள் நோயாளர்கள் அனைவருக்கும் மருந்துகளும் அனுபானங்களும், பத்திய உணவுகள் யாவும் எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாகவே வழங்கப்படுகின்றன. மருந்துகளுக்கும் உணவுகளுக்கும் கட்டணம் அறவிடப்படுகின்றன- என்ற வதந்தி பொய்யானதாகும்.

நோயாளருக்கு வேண்டிய சித்த மருந்துகளும், குடிநீர் வகைகளும், ஒற்றண வகைகளும் உடனுக்கு உடனே அங்கே தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அதற்கென இருக்கும் கைதேர்ந்த மருத்துவர்களால் இவை சிறப்பாக தயாரிக்கப்பட்டு நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்படியான வசதிகள் கொண்ட மருத்தவமனை இதுவரை வடக்கே இருந்ததில்லை.

உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்படும் இலங்கையில் உள்ள சகல சித்த ஆயுள்வேத மருத்துவ நிலையங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றில் சிகிச்சைக்கு போகும் நோயாளர்களில் 'படுக்கையில் வைத்து சிகிச்சை பெறவேண்டியர்' என்று அந்த வைத்தியசாலையின் மருத்துவர் கருதினால் அவர் அந்த நோயாளிகளை தமது குறிப்புகளுடன் அனுப்பிவைத்தால் அநநோயாளி கைதடி ஆயுள்வேத மருத்துவமனையின் உள்நோயாளர் வாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்படுவார்கள்.

இங்கு தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களில் பெண் நோயாளர்களுக்கும் ஆண் நோயாளர்களுக்கும் தனித்தனி பிரிவுகள் அமைக்கப்பட்டு இருப்பதுடன் ஆண்நோயாளரின் பராமரிப்புகளுக்கும், தேவைகளுக்கும் பணிவிடைகளுக்கும் ஆண் தாதிகள், சிற்றூழியர்களும் அதேபோல் பெண நோயாளருக்கு பெண் தாதிகள், சிற்றூழியர்கள். கங்காணிமார்களும் நியமிக்கப்பட்டு இருக்கின்றனர்.

அரசினர் ஆங்கில வைத்தியசாலைகளில் தான் வசதிகள் அதிகம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று கூறமுடியாத அளவுக்கு இங்கும் நிறைந்த வசதிகள கொண்டதாகவும், எந்நேரமும் சேவையாற்ற தயர்ராகவும் உள்ள இம்மருத்துவமனையை மக்கள் பயன் படுத்த வேண்டும் பூரணமாக இதன் சேவையைப்பெற முன்வரவேண்டும் என்ற நன்னோக்குடன், வட இலங்கை சித்த மருத்துவ சம்மேளனம் அதி முக்கிய குறிப்புகளை ஆயுள்வேத ஆணையாளர் கவனித்திற்குக் கொண்டு வந்திருக்கிறது.

1. இம்மருத்துவமனையில் முறிவுதறிவு, விஷம், கண், சம்பந்தப்பட்ட மருத்துவத்திற்கென தனிப் பிரிவுகள் அமைக்கப்பட்டு அதற்கென அவ்வவ்துறைகளில் நிபுணத்துவம் பெற்ற டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

2. இம்மருத்துவமனையில் சித்த மருந்துகள் போதியளவு இல்லாமை நீக்கப்பட்டு நூற்றுக்கு நூறு வீதமும் சித்த மருந்துகளே நோயாளருக்கு வழங்கப்பட வேண்டுமென ஆணையாளர் பணித்துள்ளதை வரவேற்கிறோம்.

3. நோயாளர்களுக்கு, ஆயுள்வேத டாக்டர்களால் வழங்கப்பட்டுவரும் சான்றிதழ்களைக் கொழும்பு ஆயுள்வேத திணைக்களத்திற்கு செல்லாது வடமாகாண மருத்துவர்கள் இம் மருத்துவமனையிலேயே பெறக்கூடிய வசதிகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தும், இவற்றைச் சில சமயங்களில் மருத்துவர்கள் பெறுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இக்குறை நீக்கப்படுவதற்காக மருத்துவசான்றிதழ்கள் இங்கு போதியளவு கையிருப்பில் எப்போதும் இருக்கவேண்டும்.

இக் குறிப்புகள் இலங்கை சித்த மருத்துவ சம்மேளனத்தினரால் ஆயுள்வேத ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. குறுகியகால கட்டத்தில் துரித வளர்ச்சியும், திட்டமிட்ட நிர்வாகமும், சிறந்த வசதிகளும் கொண்டுள்ள இம் மருத்துவமனையின் சேவைகளை பொது மக்கள் பெற்று பயன்அடைய வேண்டும், அப்போதுதான் வட பகுதியில் சித்தமருத்துவமனை நிறுவப்பட்டதன் நோக்கம் நிறைவுபெறுவதுடன் இச் சம்மேளனத்தின் பல வருட முயற்சியன் பலனைக் காணக்கூடியதாக இருக்கும்.

(அ)

### மணிவாக்கு

உண்மை நட்பு என்பது நல்லாரோக்கியத்தைப் போன்றது. அது இல்லாமல் போகும் வேளையில் தான் அதன் அருமை புரிகிறது.

சி. சி. கோல்டன்.

## ஜே. ஆர். பிரகடனத்தை கார்ட்டர் கண்டிப்பாரா?

### கூட்டணிப் பிரமுகர் கேட்கிறார்

(யாழ்ப்பாணம்)

''ஜோர்தான் நதியின் மேற்குக்கரையில் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் யூதர்கள் மேற்கொண்டுவரும் புதிய குடியேற்றங்களை பல தடவைகளில் கண்டித்துவரும் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், அதைப்போன்று தமிழ்ஈழத்தில் தாம் நிகழ்த்தப் போவதாக ஜனாதிபதி ஜே. ஆர் பிரகடனம் செய்துள்ள சிங்களக் குடியேற்றங்களையும் பகிரங்கமாகக் கண்டிப்பாரா?'' என முன்னாள் யாழ் மாநகரசபை முதல்வர் திரு. ச. அ. தர்மலிங்கம், வினா எழுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி பணிமனையில் நடைபெற்ற ''பண்டுதொட்டு இன்று வரை இனக்கொலை தொடர்கிறது இலங்கையில்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கிற்கு தலைமைவகித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்ட வினாவை எழுப்பினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''கைப்பற்றப்பட்ட அரபுப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் யூதக் குடியேற்றம், எவ்விதம் அரேபியர்களின் இனஒழிப்புக்கு உள்ளாகுமென்று கருதப்படுகிறதோ அவ்வாறே தமிழ் ஈழத்தில் மேற்கொள்ளப்படும் பாரிய சிங்களக் குடியேற்றங்களும் தமிழ் பேசும் தேசிய இனத்தின் மரபுவழி தாயகத்தை பறித்து அவற்றுக்குரிய தேசிய அந்தஸ்தை நிர்மூலமாக்கி அதன் மூலம் அவர்களை இன ஒழிப்புக்குள்ளாகிவிடும்.

இதுவே கல்லோயா, கந்தளாய், அல்லை, பாவற்குளம் பதவியா குடியேற்றம் தரும் பாடமாகும்,

"இலங்கையில் இனக்கொலை உண்டா இல்லையா என்ற கேள்விக்கு வரலாற்றிலிருந்தே சான்றுபகர முடியும். 13-ம் நூற்றுண்டிற்கு முன் காலாதிகாலமாக புத்தளம், அனுராதபுரம் முதலாக பொலநறுவ வரை நெருக்கமாக பரந்து வியாபித்திருந்த தமிழ் மக்கள் காலப்போக்கில் சிங்களவராக மாறுவதற்கு அவர்கள் பௌத்த மதத்தைத் தழுவியது காரணமாக இருக்கலாம். இதற்கு நேர்மாறாக நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த கத்தோலிக்க தமிழ் மக்கள் இனமழியக் காரணம் அவர்கள் போதனமொழியை சிங்களத்திற்கு மாற்றியதே.

1956ல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம், தொடர்ந்து வந்த நீதிமன்றச் சட்டங்களும், சம்பந்தப்பட்ட துறைகளில் கூடிய விகிதாசாரத்தில் இருந்த சிறுபான்மை மக்களை அப்புறப் படுத்துவதே உள்நோக்கமாய் அமைந்தது என்றும் கூறினர்.

(கெ)

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 22-ந் திகதி

புதன்கிழமை

(8-11-78)

**மேடம்:-** எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும், பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு பொறுமை நன்று.

**இடபம்:-** பொருள் வரவிற்குமிடமுண்டு, பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடி வரும், தாய்வழி ஆதரவுக்கும் இடமுண்டு.

**மிதுனம்:-** செய்தொழிலால் சிறப்புக்கிடமுண்டு, குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

**கடகம்:-** தூரதேச வாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும், எதிர்பாராத விபத்துக்கும் இடமேற்படும், ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

**சிங்கம்:-** இல்லறத்தில் இனிமைதவழும், வெளியிடத் தொடர்புகள் பெருகும், மகிழ்ச்சிக்கிடமுண்டு.

**கன்னி:-** எண்ணத்தில் தடைகள் தோன்றும், உடல் நலம் பாதிக்கப்படலாம், நண்டர்களும் காலை வாரிவிடக் கூடும், நிதானம் வேண்டும்.

**துலாம்:** நினைத்தது நடக்கும் பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள் வரவும் கிடைக்கலாம், பெரியோர் ஆதரவும் உண்டு.

**விருச்சிகம்:-** வியாபார விருத்திக்கு இடமுண்டு, வெளியிடத்தொடர்புகளில் முன்னேற்றம் தென்படும், சிலர் வாழ்க்கையில் இடமாற்றத்திற்குமிடமுண்டு.

**தனுசு:-** பெரியோர் ஆதரவுக்கும் பொருள்வரவிற்கும் இடமுண்டு, கைத்தொழில் விருத்திக்குமிடமுண்டு, முன்னேற்றமான நாள்,

**மகரம்:-** பகைவர்கள் பதுங்குவர், பாதையில் தடைகளுண்டு, நம்பிக்கைமோசடி மூலம் பணம் விரயமாகலாம்.

**கும்பம்:-** இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும், இதய பாரம் வேதனைப்படுத்தும், திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

**மீனம்:-** பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர், இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, சிறப்பானதினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆனையிறவில் சோதனை

(நாயன்மார்கட்டு)

ஆனையிறவுச் சந்தியில்உள்ள இராணுவத்தினர் பிரயாணம் செய்யும் வாகனங்கள் ஒவ்வொன்றையும் சோதனை செய்த பின்பே தொடர்ந்து பயணம்செய்ய அனுமதிக்கின்றனர்.

மழலைகளின் எழிலுருவங்கள்:

# மந்திகை பிரசவ

## வார்டில் அலங்கரிப்பு

(புலோலி)

கர்ப்பிணிகளினதும், தாய்மார்களினதும் நன்மை கருதி மந்திகை அரசினர் வைத்திய சாலையில் உள்ள கர்ப்பிணிகள் பிரசவ வார்ட்டுகளில் மிக அழகான இயற்கைக் காட்சிகள், அழகிய குழந்தைகளின் படங்கள் என்பன மாட்டப்பட்டுள்ளன.

இதை பருத்தித்துறை லயன்ஸ் கழகமே செய்திருக்கிறது. கர்ப்பிணிகள், தாய்மார்களின் மன மகிழ்வு பிறக்கப்போகும் பிள்ளைகளுக்கு நன்மை பயக்கும் என்ற உளவியல் ரீதியான முடிவின் படியே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர் திரு கே. நடனசபாபதி தெரிவித்துள்ளார். (உ)

# வர்த்தகர் குத்திக்கொலை! காட்டில் கிடந்தது சடலம்

## சம்மாந்துறையில் பரபரப்பு

(சம்மாந்துறை)

சம்மாந்துறை பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ள மர்மக் கொலைச்சம்பவம் ஒன்றுபெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

மீரான்சாஹிப் அப்துல் மஜீத் (வயது 28) என்ற இவ் வர்த்தகரின் கொலை கடந்தமாதம் 31ந் திகதிக்கும் இம்மாதம் 3ந் திகதிக்கும் இடையில் நடந்திருக்கலாம் எனக்கருதப்படுகிறது

சத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டு இவரது சடலம் காட்டில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டுள்ளது

மர்மக் கொலைஞர்களைப் பொலிசார் தேடிவருகின்றனர் [உ]

# அரசு தரும் உதவிகளை நாம் நன்குபயன்படுத்த வேண்டும்

## சித்தன்கேணியில் வட்டு. எம். பி.

(சங்கானை)

''கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலம் மக்களுக்குச் சேவைசெய்வதற்கென அரசாங்கம் பிரத்தியேக அமைச்சை நிறுவியுள்ளது இத் திட்டத்திற்கமைய நாடுபூராவும் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களையும் வழங்கி அதன் மூலம் கிராமப்புற மக்கள் பயனடைவதற்கு அரசு வழிகோலியுள்ளது. இதனை எம்மவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.''

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. த திருநாவுக்கரசு, சித்தன்கேணி அரசினர் தையல் பயிற்சி நிலையத்தின் பொருட்காட்சியில் மங்கள விளக்கேற்றிவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் இப் பொருட்காட்சி நடைபெற்றன்.

திரு. திருநாவுக்கரசு மேலும் கூறியதாவது: ''எமது தொகுதி அபிவிருத்திக்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் கணிசமான தொகைப் பணத்தை ஒதுக்கீடுசெய்துள்ளேன். இதில் ஐம்பதினுயிரத்தைக் கிராமமுன்னேற்றச் சங்கங்கள்மூலம்அவ்வப்பகுதிகளுக்குச் செலவிடப்படவுள்ளது.

''எமது பகுதி மூலப்பொருட்களைக்கொண்டும் மனித சக்தியைக்கொண்டும் என்ன செய்யலாமென்பதற்கு இப் பொருட்காட்சி ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. படித்த ஆண்களும் பெண்களும் இனியும் காலத்தை வீண்போக்காது மூலப்பொருட்களின் உதவிகொண்டு சிறு குடிசைக் கைத்தொழில் போன்றவற்றைச்செய்ய முன்வரல்வேண்டும்.

''பொருட்காட்சியை ஆரம்பித்துவைத்த பிரதம விருந்தினர், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் கூறியதாவது: ''உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கிராக்கியாக விற்பனைசெய்யலாமென்பதற்கு எடுத்துக்காட்டாக இக்கண்காட்சி அமைந்துள்ளது. தையல், சமையல், கைப்பணி ஆகிய துறைகளில் பயிற்சியளிப்பதற்கு அரசு வழிவகுத்துள்ளமையால் மேலும் இத்துறையில் பெண்கள் ஈடுபடவேண்டும் குடும்ப வாழ்வில் இன்புற்றிருக்க இத் துறைகள் வழிவகுக்கும்.''

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். பிரமணியம் பேசுகையில், ''எதிர்காலச் சந்ததியினரை ஆக்கபூர்வமான செயல் திட்டங்களில் ஈடுபடுத்தி அவர்களை ஊக்குவித்து நல்வழிப்படுத்துவதே எமது கடமை. நல்ல அபிவிருத்தித் திட்டங்களில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டுக் கிராம அபிவிருத்தியை மேம்பாடடையச்செய்ய வேண்டும்'' என்ருர்.

மாவட்டக் கிராம அபிவிருத்திப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு ஆர். நடராசாவும் பேசினுர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மாவட்ட அமைச்சர் பதவி மூலம்

# பிரதேசத்தைப்பாதுகாத்தல் என்பதுவிவேகமற்றகருத்து

## செந்தமிழர் இயக்கம் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சட்டரீதியான வரையறையில்லாத ஒரு பதவியை, அதிலும் பாரம்பரிய தாயகம்ஒன்று தமிழருக்கு இல்லையென மறுத்துள்ள ஒரு அரசு வழங்கும் மாவட்ட அமைச்சர் பதவி மூலம் பிரதேச பாதுகாப்பையோ, பொருளாதார அபிவிருத்யையோ ஏற்படுத்திவிடலாம் என்று எண்ணுவது ஓர் விவேக மற்ற அரசியல் முடிவாவாகும்

இவ்வாறு கூறும் தீர்மானமொன்றை செந்தமிழர் இயக்க மத்திய குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது

இலங்கைவாழ் தமிழ்தேசிய இனத்தின் பிரச்னைகள் பற்றி ஆராய்வதற்கெனக் கூடிய செந்தமிழர் இயக்க மத்திய குழு எடுத்துள்ள விசேட தீர்மானங்களில் ஒன்ருகும் அதன் விபரம் வருமாறு:-

கடந்த அரசு நிர்வாகத்தின் கீழ் இருந்த அரசியல் அதிகாரி பதவியே இன்றைய அரசு நிர்வாகத்தினல் மெருகூட்டப்பட்ட மாவட்ட அமைச்சர் பதவியாகும். முன்னைய அரசியல் அதிகாரிப் பதவியும் இன்றைய மாவட்ட அமைச்சர் பதவியும் அரசியல் அமைப்பின் மூலம் பதவிக்குரிய அந்தஸ்து, அதிகாரங்கள் சட்டரீதியாக தெளிவாக்கப்படவில்லை. ஆனல் முன்னைய அரசியல் அதிகாரி பதவிக்கும் இன்றைய மாவட்ட அமைச்சர் பதவிக்கும் உள்ள ஒரே ஒரு வேறுபாடு உண்டு அது; மாவட்ட அமைச்சர் பற்றி இன்றைய அரசு நிர்வாகம் வெள்ளை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுவைத்தமையே.

வெள்ளை அறிக்கை ஒருசட்டமல்ல. இதனை வெளியிடுவதன் நோக்கம் அரசு தனது ஆலோசனைகளைப்பற்றி பொதுசனக் கருத்தை உருவாக்குவதே. மாவட்ட அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்க ஒரு மாவட்ட அபிவிருத்தி சபை பற்றியும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அமைப்பு, அதிகாரங்கள் உறுப்பினர் தகமை, நியமனம் போன்ற பிற விபரங்கள் எதுவும் தெளிவாக்கப்படாத நிலையில் உள்ளது இச் சபையும் இன்று கச்சேரிகளில் அப்பகுதி எம் பி களுடன் நடாத்தப்படும் மாவட்ட இணைப்புக் குழுக்களின் அதிகாரத்தை ஒத்ததாகவே அமைய முடியும்.

சட்டரீதியான வரையறையில்லாத ஒரு பதவியை அதிலும் பாரம்பரிய தாயகம் ஒன்று தமிழருக்கு இல்லையென மறுத்துள்ள ஓர் அரசு வழங்கும் பதவிமூலம் பிரதேசப் பாதுகாப்பினையோ, பொருளாதார அபிவிருத்தியையோ ஏற்படுத்திவிடலாம் என்று எண்ணுவது ஒரு விவேகமற்ற அரசியல் முடிவாகும்.

மாட்ட அமைச்சரின் அதிகாரங்கள் இவை, இவை என சட்டப்படி தெளிவாக்கப்படாத நிலையில் ஏவல்கொள்ளப்பட்ட ஒருவன் ஏவல் கொண்ட எஜமானின் பணிப்பை சிரமேற்கொண்டு நிறைவேற்றுவதுபோல, நிறைவேற்று அதிகாரங்கள் யாவும் தன்கையில் குவித்து வைத்திருக்கும் ஜனுதிபதியின் சொந்தப் பணிப்புகளை மாவட்டத்தில் நிறைவேற்றும் ஒரு தனிமனித விசுவாசம் உள்ள ஊழியனுகவே ஒரு மாவட்ட அமைச்சர் செயல்படமுடியும்.

செந்தமிழர் இயக்கம் தமிழ் இனத்தின் தனித்துவத்தை ஏற்று அதற்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனது தலை விதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமை உண்டு என வலியுறுத்துகின்றது.

இதை நாடிச் செல்லத் தகுந்த ஓர் அரசில் வடிவத்தை தமிழர் தம் தாயகமான தமிழ் ஈழம் முழுமைக்கும் பொதுவான மாநில சுயாட்சியாக மலர்ந்து சோவியத் ஒன்றியத்தில் உள்ளது போன்று தனிக் கொடி, தனிதேசிய கீதம், தனிப்பாராளுமன்றம், முதலமைச்சர் ஒருவர் தலைமையில் அமையும் தனி அரசாங்கம் என்பனவையே செந்தமிழர் இயக்கம் வலியுறுத்தவிரும்புகிறது.

நிலப்பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி போன்றனவை வலியுறுத்தி இப்பதவியை ஏற்பதற்கு நியாயம் கற்பிக்க முயலும் சக்திகள் உணரத்தவறிய ஒரு அடிப்படை உண்மை உண்டு

மாவட்ட அபிவிருத்தியைவிட மகாண அபிவிருத்தியே ஒரு ஆகக்குறைந்த அளவினதாக விளங்குகின்றது. இந் நிலையில் சில மாவட்டங்கள் ஒரு எம். பி. யுடன் விளங்கும் பரிதாப நிலையில் ஜனநாயகப் படுத்தப்பட்ட் அல்லது அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைப்புகள் உதயமாகும் என எதிர் பார்ப்பது எம்மை நாமே ஏமாற்றுவதாகும்.

இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட இன உடன்பாடுகளில் தலைசிறந்த பண்டா-செல்வா ஒப்பந்தத்தின்படி முன்வைக்கப்பட்ட பிரதேச சபை கூட சுயநிர்மானத்தின் அடிப்படையில் இணைந்தும் செயல்படலாம், என்ற நிலை அன்றே ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது இன்றும் வெறும் கருத்தாகவே அரசியலில் புறக்கணிக்கப்பட்டு இருப்பது வருந்தத்தக்கது.

இன்று தரப்படும் மாவட்ட அமைச்சர்பதவியைசட்டப்படி அமைந்த மக்கள் மன்றம் ஒன்றில் தலைவரிடம் ஒப்படைப்பதாயின் அதுவரவேற்கத்தக்கது இன்றுள்ள மாவட்ட எம்.பிக்களும் எதிர்காலத்தில் தெரிவு செய்யப்பட உள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்களையும் உள்ளடக்கிய மாவட்ட மக்கள் மன்றத்தினரால் தெரிவு செய்யப்பட்ட தலைவரே மாவட்ட அமைச்சராக வரும் நிலை உருவானுல்தான் மாநிலங்களில் இயங்கி வரும் மக்கள் அங்கீகாரம் பெற்ற அரசியல் இயக்கங்கள் மாவட்ட நிர்வாகத்தில் தனித்துவத்துடன் செயல்பட வழி வரும் என செந்தமிழர் இயக்கம் சுட்டிக்காட்ட முனைகின்றது. (ஊ)

### தரமுயர்த்தக் கோரிக்கை

[நயினதீவு]

நயினதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலயத்தை மகாவித்தியாலயமாகத்தரமுயர்த்துமாறு நயினதீவு தெற்கு கிராமமுன்னேற்றச் சங்கம் கல்விப்பகுதியினரைக் கேட்டுள்ளது.

நயினதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை சுமார் 650மாணவர்கள் கல்விகற்று வருகிருர்கள். குறித்த பாடசாலை தீவுப்பகுதியில் பலவகையிலும் முதலிடத்தைப் பெற்று வருகிறது. குறித்த பாடசாலை நயினதீவு தெற்குப்பகுதியில் அமைந்திருப்பதாலும் தெற்குப் பகுதிப்பிள்ளைகளின் வசதியை முன்னிட்டு மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தி தருமாறு கல்விப்பகுதியினரை நயினதீவு தெற்குக் கிராமமுன்னேற்றச்சங்கத்தலைவர் திரு. அ. நல்லையா கேட்டுள்ளார். [இ]

# புலவர்மணிக்கு

## சாவகச்சேரியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அமரர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை சாவகச்சேரியில் வந்து அக்கால • மகா பிரபுவாகத் துலங்கிய சட்டமேதை என். வேலுப்பிள்ளையின் ஆதரவில் பல விரிவுரைகள் நடாத்தினுர். ச. பொன்னம்பலப் புலவருடன் கூடி கல்வயல் வேதவண விநாயகர் (விதானை) கோவிலில் கந்தபுராண விரிவுரைகள், உரைகள் நடாத்தியவர். இவருடைய மடியில் தென்மராட்சி தந்த சிற்பி வே. குமாரசாமி, வே. சந்திரன் (பின்னர் கீழ்மாகாணச் சீனித் தொழிற்சாலை முகாமையாளர்) மழலை பேசித் தவழ்ந்து விளையாடியவர்கள். இவ்வரிய மேதை வடக்கையும் கிழக்கையும் இணைத்த இலக்கியப் பாலம். இவர் மறைவு தமிழுலகிற்கு ஈடு இணையற்ற நஷ்டமாகும்.''

இவ்வாறு சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் வே. குமாரசாமி அறங்காவற் குழுவினரால் நடத்தப்பட்ட புலவர்மணி இரங்கற் கூட்டத்தில் தலைமைவகித்து உரை நிகழ்த்திய ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினுர்.

திரு. அ. ஆறுமுகம், திரு. செல்லையா யோகேசுவரன், திரு. இ. பரமேசுவரன் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

அனுதாபச் செய்தியின் பிரதியை புலவர்மணியின் குடும்பத்தாருக்கும் அனுப்பிவைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் ஆரம்பமாகையில் இரு நிமிட நேரம் அனைவரும் மௌனஞ்சலி செலுத்தினர் (அ)

### நடேஸ்வரா வெற்றி

[மாவிட்டபுரம்]

யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி ஒன்றில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் நடந்த 2ம், 3ம்பிரிவினருக்கான உதைபந்தாட்ட மோதலில் காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரியுடன் ஒஸ்மானியாக் கல்லூரி மோதியது. 3ம் பிரிவில்நடேஸ்வராக்கல்லூரி 3-1 கோல்களாலும், 2ம் பிரிவில் 5-0கோல்களாலும் வெற்றியீட்டியது. [ஈ]

### வடமராட்சியில் துண்டுப்பிரசுரம்

(நெல்லியடி)

சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்யக் கோரி புதிய துண்டுப்பிரசுரங்கள் வடமராட்சிப்பகுதி எங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

புதிய தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியினரால் இத் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இத் துண்டுப்பிரசுரங்களில் ''காசிஆனந்தன், மாவை சேனுதிராசா ஆகியோரை விடுதலை செய்க; மக்கள் உரிமைகளை நசுக்கும் அரசாங்கத்தை எதிர்ப்போம்; கட்சி மாறி அரசாங்கத்தில் சேர்வோரை எதிர்ப்பேயே'' போன்ற சுலோகங்கள் காணப்படுகின்றன.

[கொழும்பு]

இலங்கையிலிருந்து 5,500 மைல் தொலைவில் பெரும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பூகம்ப அதிர்வுகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் எங்கு பூகம்பம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை. [இ[

# வாஷிங்டனிலிருந்து எம். ஜி. ஆர். வெள்ளநிலை பற்றி கேட்டறிந்தார்!

## நிவாரணப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்

சென்னை, நவ. 7

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு புயல், மண்சரிவு ஆகியவற்றினுல் ஏற்பட்ட அவல நிலைமையைத் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வாஷிங்டனிலிருந்து தொலைபேசி மூலம் கேட்டறிந்து கொண்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்ட திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அதிகாரிகள் சுறுசுறுப்புடன் இயங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நிதி அமைச்சர் திரு. மனோகரனுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டே திரு. இராமச்சந்திரன் வெள்ள நிலைமை குறித்து அறிந்து கொண்டார்.

# அமைதி ஏற்பட்டதும் ஈரானில் பொதுத்தேர்தல்

## புதிய இராணுவ அரசின் பிரதமர் அறிவிப்பு

தெஹ்ரான், நவ. 7

ஈரானில் அமைதி ஏற்பட்டதும் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று புதிதாகப் பதவி ஏற்றுள்ள இராணுவ அரசின் பிரதமர் ஜெனரல் குலாம் நஸார் அஸாரி நேற்று வானொலி மூலம்நாட்டு மக்களுககு விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

முன்னைய பிரதமர் ராஜினமாச் செய்ததை அடுத்து மன்னர் ஷா நேற்று புதிய இராணுவ அரசை நியமித்தார்.

புதிய பிரதமர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

''தற்போது பதவி ஏற்றிருக்கும் இராணுவஅரசு தற்காலிகமாகவே பதவியிலிருக்கும்.

நாட்டில் நிரந்தர அமைதி ஏற்பட்டதும் ஒரு தேசிய அரசிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடைபெறும்.

இதேவேளையில் தெஹ்ரானிலும் சுற்றுப்புறங்களிலும் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் தற்போது புதிய இரணுவ அரசைப் பதவி நீக்கம் செய்யுமாறு கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள், பல கட்டிடங்களைத் தீயிலிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

# தமிழ்நாட்டில் தொடர்ந்து மழை

## இதுவரை 110 பேர் பலி!

சென்னை. நவ. 7

தமிழ்நாட்டில் சில பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்துவருவதாகவும் குளங்கள் உடைப்பெடுத்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

கன்னியாகுமரியில் தொடர்ந்து பெய்து வரும் பெரு மழை காரணமாக 30 ஏரிகள் உடைப்பெடுத்துள்ளன.

சேலத்தில் 1,000 குடிசைகள் சேதமடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் இதுவரை 110 பேர் பலியாகியுள்ளனர் என்றும் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 89 பேர் பலியாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### மண்சரிவு

நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இம்மாவட்டத்துடனை சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. (இ)



விரைவில் திரைக்கு வரவிருக்கும் ஈழத்துத் தமிழ்த்திரைப் படமான தங்கமணி பிக்சர்ஸ்ஸாரின் மூன்ருவது தயாரிப்பான 'நெஞ்சுக்கு நீதி' விரைவில் உள்ளூர் திரைகளுக்கு வரவிருக்கின்றது.

## காயத்ரியின் அஸ்தி......

சிக்மகளூர், நவ. 7

சிக்மகளூர் இடைத் தேர்தல் பிரசாரத்தின்போது பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான கல்லூரி மாணவி செல்வி காயத்ரியின் (வயது 19) அஸ்தியை சென்னை, கல்கத்தா, ஹைதராபாத் ஆகிய நகரங்களுக்கு எடுத்துச் செல்ல மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்,

இதேவேளையில் நேற்று காயத்ரியின் அஸ்தி பெங்களூருக்கு எடுத்துச் சென்றபோது அங்கு தடை உத்தரவு விதிக்கப்பட்டது. [இ]

## பத்திரிகைகளுக்கு தடை!

டெஹ்ரான், நவ. 7

ஈரானில் நடைபெற்ற கலவரத்தைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கு அரசு தடை விதித்துள்ளதுடன் பல பத்திரிகையாளர்களையும் கைது செய்துள்ளது. [இ]

## 25 கறுப்பு இன மக்கள் படுகொலை

சாலிஸ்பரி, நவ, 7

ருெடீஷியாவில் 25 கறுப்பு இன மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

கொலையாளிகள் யார் என்று இன்னமும் தெரியவில்லை. கம்யூனிஸ்ட் நாடு ஒன்றில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களிலேயே இக்கொலை நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [இ]

## தி. மு. க. நடத்தும் கண்டனக் கூட்டங்கள்

சென்னை, நவ. 7

தமிழகமெங்கும் நவம்பர் 11, 12 ம் திகதிகளில் அடக்குமுறை கண்டனக் கூட்டங்களை நடத்துவதென தி. மு. க. செயற்குழு முடிவு செய்துள்ளது.

கூட்டங்கள் நடைபெறுவதைத் தடை செய்யும்வகையில் சென்னை பொலிஸ் கமிஷனர் நேற்று முன் தினம் முதல் 10 தினங்களுக்குப் பொதுக் கூட்டம், ஊர்வலம் நடத்துவதற்கான தடையுத்தரவை பிறப்பித்துள்ளார். [செ]


நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
நூற்றுக்கு நூறு

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர் -விஜயா
நல்லநேரம்

REGAL NOW SHOWING
(Jaffna) Daily at, 4-30, 7-00&9-30 p.m,
TEN G MEN (Action Film)

தினசரி 4 காட்சிகள்
ராணி சிவாஜி-மஞ்சுளா
[யாழ். நகர்] நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)
நாளை வெள்ளி விழா பிரதமவிருந்தினர் விசேஷ ஆணையாளர் திரு க. சிவஞானம் அவர்களால் பல விலையுயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும். ரிக்கட் அடிக்கட்டைகள் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

சாந்தி (யாழ் நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-பத்மினி-சௌகார்-நாகேஷ்
பேசும் தெய்வம் (புதிய பிரதி)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் போன்: 466
[யாழ்ப்பாணம்] 2-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

ராஜா தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) ஃ மரிக்கார் ராமதாஸ் ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
(புத்தம் புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, 9-30.
Loretta Deluca...George Marshall...Anita Ekberg
in
Sign of The Gladiators
Adventure Thrill—Scope—Color

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பாக்கியலட்சுமி
(புதியபிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) எங்கள் தங்க ராஜா

Rio (Jaffna)
Daily 4 Shows
KILLERS OF KILLIMANJARO
(Mistery-Thrill)

# பீலிக்ஸுக்கும் அழைப்பாணை

## ஜனாதிபதி கமிஷன் உத்தரவு

(கொழும்பு)

**முன்னாள் நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகும்படி அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.**

முன்னைய அரசின் நிர்வாகச் சீர்கேடுகள் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று திரு. பீலிக்ஸ் டயஸ். ஆர். பண்டாரநாயக்காவுக்கு இந்த அழைப்பாணையை விடுத்தது.

டிசம்பர் மாதம் 18-ம் திகதி திரு. பண்டாரநாயக்கா தம் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கான விளக்க அறிக்கையை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனறும் ஜனவரி 22-ம் திகதி ஆணைக்குழுமுன் அவர் ஆஜராக வேண்டும் என்றும் ஆணைக்குழு உத்தரவிட்டது.

முன்னாள் காணி அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு ஏற்கனவே தம்முன் ஆஜராகும்படி விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்திருப்பது தெரிந்ததே.

திரு. கொப்பேகடுவ தமக்கு எதிரான புகார்களுக்கு இம்மாதம் 16-ம் திகதி விளக்கம் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் 22-ம் திகதி ஆணைக்குழுமுன் ஆஜராக வேண்டும் மென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஜெயபத்திரான, முன்னாள் லஞ்சத்தடுப்பு திணைக்கள ஆணையாளர் திரு. இயன்விக்கிரமநாயக்க, கொழும்பு மாநகரசபை முன்னாள் மேயர் ஜனாப் ஏ. எச். எம். பௌஸி ஆகியவர்களுக்கும் இவ்வாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

புயலில் சிக்கிய

## 6 இலங்கைப் படகுகள் இராமேஸ்வரத்தில் தஞ்சம்

(கொழும்பு)

காணாமல் போனதாக இலங்கை மீனவர்கள் கோஷ்டியொன்று தமிழ் நாட்டில் ராமேஸ்வரத்தில் கரைசேர்ந்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மீன் பிடிப்பதற்காக 6 படகுகளில் புறப்பட்ட இவர்கள் புயலில் சிக்கி ராமேஸ்வரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரத்தில் இவர்கள் சுகமாக இருப்பதாகவும் இவர்களையும் இவர்களின் படகுகளையும் இலங்கைக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

## ரஜனிகாந்த் பேட்டி

ஸ்டைல் நடிகர் ரஜனிகாந்த் நடிகனாகவரா திருந்தால் பெரிய 'கேடி'யாக மாறியிருப்பாராம், அதற்கான திட்டம்கூட வைத்திருந்தாராம். இதுபற்றி அவரே நமது நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டி வாரமலரில் வெளிவரும்.

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

மூத்திரைச்சந்தையிலுள்ள சங்கிலி அரசன் சனசமூக நிலையத்திற்கும், சிறுவர் விளையாட்டு அரங்கத்திற்கும் நல்லூர் எம்.பி. மு. சிவசிதம்பரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

## அருமைநாதர் காலமானார்

(வண்ணார்பண்ணை)

பிரபல சமூகசேவையாளரும், நாரந்தனைக் கிராமசபையின் முன்னாள் தலைவருமான ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த ச. அருமைநாதர் கடந்த திங்கட்கிழமை மாரடைப்பால் காலமானார்.

தமிழரசுக்கட்சியின் ஆரம்பகாலத் தொண்டர்களில் ஒருவரும், இக்கட்சியின் பொதுச் சபை உறுப்பினரும், ஊர்காவற்றுறைத்தொகுதித்தமிழரசு மாவட்டக் கிளைத் தலைவருமான இவர், வேலணை, நாரந்தனைக் கிராமசபைகளில் 32 வருடங்களாகக் கிராமசபை உறுப்பினராகச் சேவையாற்றியவராவார். தீவுப்பகுதி அரசியல் பிரமுகர்களில் பிரபலமானவராகத் திகழ்ந்த இவர், தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தற்போதைய நடவடிக்கைக் குழுவில் அங்கத்தவராவார்.

63 வயது நிரம்பிய அருமைநாதர், சிறிப் போராட்டத்தின்போது சிறை சென்றதுடன், இன விடுதலை இயக்கங்களிலும், போராட்டங்களிலும் முன்னின்று உழைத்தவருமாவார். ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியின் பழைய மாணவர் இவர்..

## மரண அறிவித்தல்

### சவிரிமுத்து அருமைநாதர்

நாரந்தனை கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. சவிரிமுத்து அருமைநாதர் காலமானார். இவர் ரேசவினின் அன்புக்கணவரும் தவநாதன், சர்வநாதன் (வெளிவாரி மாணவர் பல்கலைக்கழகம்) நித்தியநாதன் (இங்கிலாந்து) ஆகியோரின் அருமைத் தந்தையாருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு நாரந்தனை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

0746

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 688வது தேசிய லொத்தர் சபை முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**13 N 0701**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**18 A 0145**
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
**02 C 0553**
ரூபா 10,000

தலா ரூபா 1,121-97 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 03 A 0546 | 31 A 0767 |
| 07 B 0800 | 14 B 0008 |
| 23 B 0332 | 32 B 0148 |
| 32 B 0366 | 04 C 0417 |
| 14 C 0614 | 18 C 0363 |
| 21 C 0338 | 05 D 0932 |
| 07 D 0727 | 13 D 0152 |
| 15 D 0710 | 20 D 0175 |
| 25 D 0932 | 28 D 0773 |
| 05 E 0501 | |
| 04 E 0500 | 07 E 0616 |
| 09 E 0803 | 10 E 0090 |
| 30 E 0918 | 05 E 0501 |
| 03 F 0464 | 10 F 0820 |
| 11 F 0216 | 26 F 0433 |
| 07 G 0165 | 08 G 0 61 |
| 13 G 0391 | 18 G 0340 |
| 21 G 0284 | 23 G 0937 |
| 24 G 0640 | 03 H 0382 |
| 11 H 0466 | 12 H 0245 |
| 13 H 0861 | 19 H 0499 |
| 17 J 0157 | 17 J 0521 |
| 21 J 0038 | 18 K 0274 |
| 20 K 0298 | 21 K 0160 |
| 23 K 0026 | 24 K 0668 |
| 30 K 0426 | 07 L 0384 |
| 10 L 0796 | 15 L 0659 |
| 19 L 0245 | 21 L 0766 |
| 25 L 0195 | 09 M 0290 |
| 23 M 0731 | 01 N 0264 |
| 24 N 0950 | 13 N 0393 |
| 13 N 0807 | 22 N 0271 |
| 31 O 0999 | 02 P 0738 |
| 07 P 0333 | 30 P 0137 |
| 32 P 0153 | 03 Q 0143 |
| 17 Q 0033 | 13 R 0161 |
| 14 R 0444 | 16 R 0087 |
| 23 R 0928 | 12 S 0248 |
| 20 S 0992 | 18 T 0041 |
| 02 U 0402 | 09 U 0096 |
| 10 U 0720 | 20 U 0141 |
| 26 U 0274 | 08 V 0195 |
| 15 V 9640 | 17 V 08?7 |
| 17 V 0885 | 22 V 0066 |
| 10 W 0915 | 13 W 0051 |
| 23 X 0209 | 31 X 0008 |
| 12 Y 0620 | 14 Y 0509 |
| 18 Y 0878 | 27 Y 0971 |
| 09 Z 0745 | 18 Z 0016 |
| 20 Z 0464 | 22 Z 0900 |
| 27 Z 0217 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## சகலருக்கும் சமத்துவம் இங்கும் ஏற்பட வேண்டும்

### சோவியத் புத்தகக்கண்காட்சியில் யாழ். எம்.பி. 'யோகேஸ்'

(யாழ்ப்பாணம்)

அக்டோபர் புரட்சியின் சாதனைகளும், தேசிய இனப் பிரச்னைகளின் தீர்வும், தமிழினத்தின் விடுதலைக்கு வழி காட்டவேண்டும் என அக்டோபர் புரட்சியின் 61வது வருடாந்த தினத்தையொட்டி யாழ். நகரில் இடம் பெற்ற புத்தகக்கண்காட்சியை திறந்துவைத்துப்பேசிய யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.

இக்கண்காட்சி யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவிலுள்ள ஆர். ஆர். பூபாலசிங்கம் நிறுவனத்தில் இடம் பெற்றது. கண்காட்சிதொடர்ந்து 15தினங்கள் நடைபெறும்.

திரு. வெ. யோகேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில் "இன்று இப்புத்தகக் கண்காட்சி மூலம் சோவியத் நாட்டின் அரசியல் சமூக, பொருளாதார மறுமலர்ச்சியை பல நூல்களாக எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறீர்கள் இளையசமுதாயம் இந்நூல்களை படிப்பதன் மூலம், இனவிடுதலைக்கான சகல அறிவையும் பெற்றுக்கொள்ளலாம்.

"சோவியத் யூனியனில் 100க்கு அதிகமான தேசிய இனங்கள், சகலஉரிமையுடனும் வாழ்கின்றன அங்கு சிறுபான்மை பெரும்பான்மை என்ற பாகுபாடு கிடையாது. சகலருக்கும் சமத்துவம் உண்டு, இன்று அவர்கள் கொண்டாடுகின்ற அக்டோபர் புரட்சியின் மூலம் அவர்களுக்கு சமத்துவம் கிடைத்தது நாமும் நமது இறைமையை நிலைநாட்டி எமது மக்களும் சமத்துவமாக வாழவேண்டும். அதற்கு நாம் தமிழ் ஈழத்தைப்பெற்றாக வேண்டும். அப்போதுதான், நாம் சுயநிர்ணயஉரிமையுடன் வாழலாம் இதற்கு அக்டோபர் புரட்சி வழிகாட்டும்" என்றார்.

கண்காட்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஸ்தாபன அதிபர் திரு. ஆர் ஆர் பூபாலசிங்கம் நன்றி தெரிவித்துக் கொண்டார். (கெ)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி மாலை அணிவித்து வரவேற்றார். தமிழ்நாடு அமைச்சர்கள் திரு. நாஞ்சில் மனோகரன், திரு. எட்மண், திருமதி பி. கே. சரஸ்வதி மற்றும் சபாநாயகர் திரு. முனுஆதி, இலங்கைத் தூதுவர் திரு கோதபதாசா, முப்படைத் தலைவர்கள், தமிழ் நாடு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகியோரும் ஜனாதிபதி தம்பதிகளை வரவேற்றனர். இலங்கை ஜனாதிபதியுடன் இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் திரு. ஏபிரகாமும் வந்திருந்தார், விமானநிலையத்தில் இலங்கையர் பலரும் திரண்டுநின்று வரவேற்றனர். ஜனாதிபதி தம்பதிகள் பின்னர் ராஜ்பவன் சென்றார்கள்.

### தடைஉத்தரவு

ஜனாதிபதி திரு. கஜ. ஆர். ஜயவர்த்தன சென்னை வருவதைத் தொடர்ந்து நேற்றுக் காலை 6 மணிமுதல் இம்மாதம் 20ம் திகதிவரை, சென்னையில் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் தடைஉத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

## இன்று நூலறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

முருகையனின் 'ஆதிபகவன்' நெடுங்கவிதை நூல் அறிமுக விழா இன்றுகோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது.

பிற்பகல் 2 மணிக்கு 'சொக்கன்' தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் 'மூல்லைமணி' வெளியீட்டுரை நிகழ்த்துவார். கலாநிதி அ, சண்முகதாஸ், சி.மௌனகுரு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர், எம். ஏ. நுஃமான் ஈழத்துக்காவியங்கள் பற்றிய மதிப்பீட்டுரை நிகழ்த்துவார். (அ)

## 6ந் திகதி பிரவேசப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 6ந் திகதி நடைபெறவிருந்த 6ந் தரப் பிரவேசப் பரீட்சை எதிர்வரும் 11ந் திகதி நடைபெறுமென வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் பரீட்சைக்குத் தோற்றுவோர், பரீட்சை மண்டபத்தில் காலை 8-30 மணிக்குப் பிந்தாமல் சமூகமளிக்கும்படி அவர் கோரியிருக்கிறார்.

## மரண அறிவித்தல்

### அருணாசலம் கந்தையா

அராலி தெற்கு "வடக்கு வீடு" திரு. அருணாசலம் கந்தையா (இளைப்பாறிய P. W. D. Store Keeper) அவர்கள் காலமாகிவிட்டார்கள். இவர் காலஞ்சென்ற நீராவியடி திருவாளர்கள் தில்லையம்பலம், செல்லப்பா, விசுவநாதன் ஆகியோரின் இளைய சகோதரரும், காலஞ்சென்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. அருணாசலம் அவர்களின் அருமைத் தந்தையும், திருமதி மனோன்மணி அருணாசலம் அவர்களின் அன்பு மாமனாரும். டுபாய் இராஜேஸ்வரன், யோகேஸ்வரன், கொழும்பு மருத்துவபீட மாணவன் பத்மேஸ்வரன், பேராதனை பொறியியற்பீட மாணவி வசந்தி ஆகியோரின் இனிய பேரனுருமாவர். மேலும் இவர் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய ஆசிரியர் திரு அம்மையப்பர், கொழும்பு John Keels நிறுவன இயக்குனர்சபை திரு கயிலாசபிள்ளை, திட்டமிடல்அமைச்சு திரு அம்பலவாணர், புள்ளிவிபர இலாகா திரு, சங்கரப்பிள்ளை ஆகியோரின் பேரன்முறைப் பூட்டனுருமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அராலியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும்.

0745